பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 | தை 19 | ரபி-அவ் 14 | இதழ் 355

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 2-2-80

தரத்தில் நிகரற்ற
மான், முயல்,
விளக்கு, வரிக்குதிரை
செவனமார்க்
ஒடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்
36, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

## தி.மு.க. [illegible] லட்சுமணன் லோக்சபை துணை சபாநாயகர்

புதுடில்லி, பெப். 1

தி.மு.க. எம்.பி. திரு. லட்சுமணன் லோகசபையின் துணைசபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

குரல் வாக்கெடுப்புமூலமே அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

நீண்டகாலமாக தி.மு.க.

(8-ம் பக்கம் பார்க்க)

CAMPUS LIBRARY UNIVERSITY OF SRI LANKA

### இந்திரா காங்கிரஸ் ஆட்சியில்

# இலங்கை - இந்திய நட்புறவு தொடர்ந்து வலுப்பெறும்

## பிரேமாவுக்கு - இந்திரா செய்தி




(புதுடில்லி)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான பாரம்பரிய நல்லுறவு தமது ஆட்சியில் மேலும் வலுவடையும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கைப் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருமதி இந்திராகாந்தி கடந்த தேர்தலில் வெற்றியீட்டி பிரதமராகப் பதவி ஏற்றதைப் பாராட்டி திரு. பிரேமதாசா அனுப்பியிருந்த செய்திக்குப் பதில்அளிக்கும்வகையிலேயே திருமதி காந்தி மேற்கண்ட



செய்தியை அனுப்பியிருந்தார்.

ஜனநாயக கோட்பாடுகளில் மக்கள் வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை கடந்தமாத ஆரம்பத்தில் நடைபெற்ற இந்திய இடைக்காலத் தேர்தல்முடிவுகள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன என்றும் திருமதி காந்தி தமது செய்தியில் கூறியுள்ளார். (இ)

## 2-வது பிராந்திய ஒலிபரப்பு நிலையம்

(கொழும்பு)

மாத்தறையில் அமைக்கப்பட்டுள்ள ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2 வதுபிராந்திய ஒலிபரப்பு நிலையத்தை நாளை ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் ஆரம்பித்துவைப்பார். (இ)

## ரூ 12 லட்சம் மோசடி, மீண்டும் றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறி பலஇளைஞர்களிடம் 12 லட்சம் ரூபா மோசடி செய்தது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த வவனியா பம்பைமடுவைச் சேர்ந்த கதிர்காமு செல்வராஜா மீண்டும் இம்மாதம் 12-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## மூளைநரம்பு சத்திரசிகிச்சை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரியில் மூளை நரம்புநோய் சத்திர சிகிச்சை கிளினிக்கை மூளை நரம்பு நோய் நிபுணர் டாக்டர் என். சுப்பிரமணியம் மீண்டும் இம்மாதம் 4ம் திகதி ஆரம்பிக்கின்றார். இச்சிகிச்சை இரு கிழமைகளுக்கு ஒருதரம் திங்கட்கிழமைகளில் யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெறும்.

டாக்டர் சுப்பிரமணியம் கண்டி பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றுகிறார். யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் முன்பு மூளை நரம்பு சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு பொறுப்பதிகாரியாகவிருந்த அவர் கண்டிக்கு மாற்றம்பெற்ற போதும் யாழ். மாவட்ட நோயாளிகளின் நன்மைகருதி இச் சிகிச்சையை இருகிழமைகளுக்கு ஒருதரம் நடத்திவருகிறார்.

டாக்டர் சுப்பிரமணியம் ஆறு மாத காலம் பிரிட்டனிலும் ரஷ்யாவிலும் விடுமுறையைக் கழித்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

# யாழ். நீதிமன்றக் கட்டிடம் பண்ணையில் தொடருமா?

## நடவடிக்கை எடுப்பதாக பிரதி அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

நீதியமைச்சில் இடம்பெறும் மனிதசக்தியின் வீண் விரயம், இடநெருக்கடி, உபகரணங்கள், கட்டிடப்பற்றாக்குறை, நிதிசம்பந்தமான விடயங்களை ஆராய்வதற்காக பிர[illegible]திரி திரு. ஆர். பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்ட குழு நேற்று யாழ் மேல்நீதிமன்றத்தில் அதன் தலைவர் பிரதிநிதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா தலைமையில் கூடி, யாழ். நீதிமன்றங்களின் பிரச்னைகள்பற்றி யாழ். சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடியது.

பண்ணையில் நீதிமன்றங்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைக்கக்கூடிய கட்டிடம் பல வசதிகளுடன் கட்டுப்பட்டுவந்ததாகவும், பின்னர் ஏதோ சில காரணங்களினால் தபால் தந்தி தொடர்புத் திணைக்களத்திற்கு அக்கட்டிடம் வழங்கப்பட்டது என்றும், இப்போது யாழ் நகரில் இருக்கும் நீதிமன்றக் கட்டிடங்கள் மிகவும் கேவலமான நிலையிலிருப்பதால் பண்ணையில் பல லட்சரூபா செலவில் ஒருபகுதி கட்டப்பட்ட கட்டிடத்தை மீண்டும் நீதியமைச்சர் பாரமெடுத்துயாழ்ப்பாண நீதிமன்றங்களின் கட்டிடத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து கட்டிமுடிக்கவேண்டுமென்றும் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் ஏகமனதாக பிரதி அமைச்சரையும் இக்குழுவினரையும் கேட்டுக்கொண்டது.

### கட்டிட வசதிக்குறைவு

தற்பொழுது கட்டிட வசதியின்மை காரணமாக நீதிமன்ற விசாரணைகள் கராஜ்களிலும் விறாந்தைகளிலும்நடைபெற்று வருவதாகச் சட்டத்தரணி திரு. ஜிம்மி இராஜரத்தினம் இக்குழு முன்னிலையில் தெரிவித்தார். நீதியரசர்களுக்கு கட்டிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தால்தான் அவர்கள் சிரமமின்றி விசாரணைகளை மேற்கொள்ளமுடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தேர்தலை யொட்டி "ஈழநாடு" நடத்திய தேர்தல் போட்டி

கடந்தமாத ஆரம்பத்தில் நடைபெற்ற இந்திய "பாராளுமன்றத்துக்கான இடைக்காலத் தேர்தலை யொட்டி "ஈழநாடு" பத்திரிகை நடத்திய தேர்தல் போட்டி சம்பந்தமான விபரங்களுக்கு எதிர் வரும் புதன்கிழமை (6-2-80) வெளியாகும் "ஈழநாடு" இதழைப் பாருங்கள்.

தூய வெண்மை தருவது
சஞ்ஜீவி சோப் வகைகள்




உடலிலும் உரோமத்திலும் வியாதிகள் ஏற்படாதிருக்க பெனின் மெடிகேட்ட் சோப்பைப் பாவியுங்கள்.




தயாரிப்பாளர்:-
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9, கண்டி வீதி நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞானவைரவர் ச. ச. நி. நடாத்தும்

# உதைபந்தாட்ட அரை இறுதிப்போட்டி

# வெற்றி நிச்சயிக்க முடியாத நிலையில்!

## மீண்டும் தொடர்ந்து நடைபெறுகிறது

(பலாலி)

'ஈழநாடு' ஆதரவில் வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன்போட்டிகள் குறித்தபடி ஞாயிறு அன்று நடைபெறமாட்டாது. பங்கு பற்றிய கோஷ்டிகளின் தீவிரமான மோதலே சாம்பியன் போட்டி ஒத்திவைப்புக்குக் காரணமாகும். இதனால் சாம்பியன் போட்டியும், பரிசளிப்பு விழாவும் பிற்போடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கோஷ்டியும் தமது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக தமது திறமை முழுவதையும், தொடர்ந்து வரும் போட்டிகளில் கூட்டிக் கொண்டே வருகிறது. இதனால் போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவதனாலும், எதிர்பாராத விதமாகத் தோற்கடிக்கப்படுவதனாலும் குறிப்பிட்ட ஒரு கழகத்திற்கு வெற்றியை நிச்சயிக்க முடியாத நிலை தற்போது உருவகியுள்ளது.

கொழும்புத்துறை - ஜெட்லையினேஸ் வி. கழகம். பலாலி அண்ணா வி. கழகம், ஈவினை - பறக்கும் இளைஞர் வி. கழகம், என்பவற்றிற்கே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய கழகங்கள் சில வற்றிற்கும் இந்நிலை ஏற்படக்கூடிய வாய்ப்பை சம்பந்தப்பட்ட கழகங்கள் ஏற்படுத்திக் கொள்கின்றன. இதனால் குறித்த கழகங்களிடையே மீண்டும் போட்டிகள் தொடர்ந்து இடம் பெறும். ஒரு கழகம் இரண்டு போட்டிகளில் பங்கு பற்றுவதன் மூலம் அரை இறுதித் தெரிவுகள் நடைபெற விருக்கின்றன.

முடிவு நிலையை நோக்கி நடைபெற்றுக் கொட்டிருக்கும் இச் சுற்றுப்போட்டி பார்வையாளர்களையும், ரசிகர்களையும் மிகவும் கவர்ந்துள்ளதுடன், விளையாட்டு வீரர்களிடையேயும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் நடைபெறவிருக்கும் அரை இறுதி ஆட்டங்களை நிரல் படுத்தி விரைவில் நடாத்தி முடிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை சுற்றுப் போட்டி அமைப்பாளர் திரு. எம். ஜெகநாதன் எடுத்துள்ளார். சாம்பியன் போட்டியும், பரிசளிப்பு விழாவினதும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

### இன்றைய போட்டிகள்

11 வீரர் போட்டியில் 'பீ' பிரிவு சாம்பியன் பலாலி - அண்ணா வி. கழகத்தை எதிர்த்து 'ஓ' குறூப் சாம்பியன் ஈவினை - பறக்கும் இளைஞர் வி. கழகம் போட்டியிடும். இப்போட்டி ஞான வைரவர் சனசமூக நிலைய மைதானத்தில் 4-00 மணிக்கு நடைபெறும்.

### நாளைய போட்டி

நாளை நடைபெறவிருக்கும் 11 வீரர் ஆட்டத்தில் 'ஏ' பிரிவு சாம்பியன் கொழும்புத்துறை - ஜெட் லையினேஸ் வி. கழகத்தை எதிர்த்து 'பி' குறூப் சாம்பியன் பலாலி - அண்ணா வி. கழகம் போட்டியிடும். இப்போட்டி 4-00 மணிக்கு இடம்பெறும்.

### போட்டி முடிவுகள்

ஏழாலை - பறக்கும் இளைஞர் வி. கழகத்திற்கும், ஏழாலை - ஜிம்மி கார்ட்டர் வி. கழகத்திற்குமிடையிலான 7 வீரர் ஆட்டத்தில் ஜிம்மி கார்ட்டர் வி. கழகம் 7-1 கோல்களால் வெற்றி பெற்றுச் சாம்பியன் ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. மத்தியஸ்தராகத் திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினர்.

11 வீரர் போட்டியில் கொழும்புத்துறை - ஜெட்லையினேஸ் வி. கழகமும், ஈவினை பறக்கும் இளைஞர் வி. கழகமும், தலா இரண்டு கோல்களைப் போட்டு வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. மயிலிட்டி - கண்ணகி வி. கழகமும் கொக்குவில் - சன்ஸ்ரார் வி. கழகமும் கலந்து கொண்ட மற்றுமொரு போட்டியில் தலா மூன்று கோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப் போட்டிகளுக்கு திரு. சீ. எஸ். அருள்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மின்சார நீடிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு மின்சார நீடிப்பு விழா நேற்று மாலை சிறப்பாக நீர்வேலி தெற்கு கந்தசாமி கோயிலடியில் நடைபெற்றது.

முன்னைநாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், முன்னைநாள் விசேட ஆணையாளருமான திரு. வை. சொக்கலிங்கம் மின்சார நீடிப்பை ஆரம்பித்து வைத்தார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், விசேட ஆணையாளருமான திரு. சி. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கோப்பாய் எம். பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சுதந்திரதின விழா

## கூட்டணி கோரிசகை

[யாழ்ப்பாணம்]

''சுதந்திரதினத்தையொட்டி அரசாங்கம் நிகழ்த்தவிருக்கும் எந்தவித கொண்டாட்டங்களிலும், அணிவகுப்புக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் எந்த ஒரு தமிழ்ப்பேசும் மகனும் கலந்து கொள்ளாமல், அவைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: ''பெப்ரவரி 4ந் திகதியை அரசாங்கம் சுதந்திர தினமாகக் கொண்டாடவிருக்கிறது. முழு இலங்கையும் சுதந்திர தினத்தைக் கொண்டடுகிறது என்ற மாயத்தோற்றத்தை உலகின் கண் முன்வைக்க எமது அரசு விரும்புகிறது. இந்த நிலையில் தமிழர் தமது எதிர்ப்பை உலகறியச் செய்ய வேண்டும்.

''தமிழ்த் தேசிய இனத்தின் அடிமை நிலையில் எவ்வித மாற்றமும் இல்லாமலிருப்பதாலும் பல தமிழ் இளைஞர்கள் நீதி விசாரணையின்றி சிறைக்கூடங்களில் வாடிக் கொண்டிருப்பதாலும், உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் பொது மக்கள் சொல்லொணாத் துன்பம் உறுகின்ற காரணத்தாலும், அடக்கு முறையாலும், காடைத்தனத்தாலும்தொழிற் சங்கங்கள் நசுக்கப்படுவதாலும் அண்மைக் காலங்களில் காவல் படையினரால் பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சூழ்நிலையில் தமிழ்த் தேசிய இனம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், மாணவமணிகள் 4-ம் திகதி நடைபெறும் அரச விழாக்கள், அணிவகுப்புக்கள் ஆகியவற்றில் கலந்து கொள்ளாது வீடுகளில் இருந்து பிரார்த்தனையில் ஈடுபடும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(கொ)

# பம்பாய் வெங்காயம்

# றாத்தல் ரூ. 3-75

## கூ. மொ. வி. உபதலைவர் தகவல்

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களிலும், தனியார் கடைகளிலும் ஒரு இறாத்தல் பம்பாய் வெங்காயம் 3 ரூபா 75 சதத்திற்கு விற்கப்படுமென கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஒரு கப்பலில் 1,000 தொன் பம்பாய் வெங்காயம் ஒல்லாந்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துள்ளதாகவும் அவ்வதிகாரி கூறினர்.

தங்களுக்குத் தேவையான அளவு வெங்காயங்களைப் பெறும்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் உபதலைவர் திரு. கே. சிற்றம்பலம் தெரிவித்தார்.

இவற்றை விநியோகம் செய்வதில் எந்தவித கட்டுப்பாடும் இருக்க மாட்டாதென்பதும், தனிப்பட்ட வர்த்தகர்களும் கோட்டா முறையில் இதனைப் பெறலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் 500 தொன் உருளைக்கிழங்கை கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் விநியோகிக்கவுள்ளதாகவும், அப்பொழுது உருளைக்கிழங்கின் விலை வீழ்ச்சியடையலாமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வெ)

## சிமெந்து வீரர்கள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய சேவையாளருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இலங்கை சிமெந்துக் கூட்டுஸ்தாபனமும் இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களமும் மோதிக்கொண்டன. ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே இறுதிவரை சுறுசுறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முடிவில் இலங்கை சிமெந்துக் கூட்டுஸ்தாபனம் இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தை 7 - 3 கோல்களால் வெற்றியீட்டியது.

இலங்கை இ. போ. ச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ராஜரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார். (அ)

## பதவிஉயர்வு; இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

ஜாதிக சுகாதார சேவைப் பொது ஊழியர் சங்கத்தின் வடபிராந்திய செயலாளர் திரு. கே. செல்வராசா, வைத்தியசாலை மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்று திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிவிட்டு இம்மாதத் தொடக்கம் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (கு)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருடம் தை மாதம் 21-ந்திகதி (4-2-80) திங்கட்கிழமை பிற்பகல் 12-25 மணிமுதல் 2-05 மணி வரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரன்
திருநிறைசெல்வன்
**இரத்தினராஜன்**
(மாவட்ட வைத்திய அதிகாரி, மாகோ.)
அவர்கட்கும்

எமது புத்திரி
திருவளர் செல்வி
**சுபத்திரா**
(வைத்திய கலாநிதி, யாழ். அரசினர் வைத்தியசாலை)
அவர்கட்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. நடராஜன் தம்பதிகள்
54/2, ஸ்ரேசன் வீதி,
தெல்லிப்பழை.

வ. இளையதம்பி தம்பதிகள்
48, சபாபதி வீதி,
தலையாளி,
யாழ்ப்பாணம்.

4853


## ஜெயத்துக்கு பாராட்டு விழா

(அரியாலை)

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக 'யாழ்ஜெயம்' 'சாந்தினி' 'ஜோதி' 'பொன்' எம். வி', என்ற பல புனைபெயர்களில் ஈழத்திலும் தமிழ் நாட்டிலுமிருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், கவிதைகள் எழுதிய வரும், ஆசிரியருமான திரு. ம. விக்டரின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்பட விருக்கின்றனர். இதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை பத்து மணியளவில் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற விருக்கிறது.

கவிஞர் ஜெயம் பல பாடநூல்களையும் எழுதியுள்ளார்.

## க.பொ.த.(உயர்தரம்)

# இம்மாதம் பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சை முடிவுகள் இம் மாதம் நடுப்பகுதியிலேயே வெளியாகுமெனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பளை, இயக்கச்சியில் நல்ல நிலையிலுள்ள தென்னங்காணியில் ஒரு பகுதியான இருபத்தைந்து (25) ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: கணேசதோட்டம், இயக்கச்சி.

4795


## நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

# அமய தமிழ் சுருக்கெழுத்தாளர் பதவி.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 15-02-1980ம் திகதிவரை கீழ்க்காணும் தகைமையைக் கொண்டவர்களிடமிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. விண்ணப்பதாரர் க. பொ. த. (சாதாரண) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியும், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய இரு பாடங்களாகவும், அதில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஸ்தாபனத்தால் நடாத்தப்பட்ட க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு சமமான அல்லது அதற்குமேலான பரீட்சையில் தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆகிய பாடங்களில் விசேட சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு குறிப்பிட்ட தகைமைகள் இருப்பின் முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. 15-02-1980-ல் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 35 வயதிற்குக் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஆங்கில அறிவு பெற்றிருப்பது ஓர் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

5. மேற்படி பதவிக்கான வேதனம் நாளொன்றிற்கு ரூபா 10-75, அதற்குரிய பொருத்தமான விசேடபடிகளுமாகும்.

6. இப்பதவி அமய அடிப்படையில் அமையும். எதுவித நிரந்தர பதவிக்கும் இச்சபையில் உரிமைகோர உரித்துடையராகார்.

7. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரமும், கல்வித்தகமைச் சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகியவற்றைசமர்ப்பிக்கஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இதுபற்றி மேலும் விபரங்கள் அறிய விரும்பினால் இவ் வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். கே. திரவியநாயகம்**
தலைவர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி,

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
30-01-1980.

4849

## சமாதான நீதவான்கள்

(மன்னார்)

மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணண்டோ உதவி அரசாங்க அதிபர் திரு. மு. ஆறுமுகம், கச்சேரி காரியாலய உதவியாளர் திரு. பி. சண்முகதாசன் ஆகியோர் சமாதான நீதவானக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மன்னார் நீதவான் திரு. மடவெல முன்னிலையில் சமாதான நீதவானகசத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பூமியின் வயிற்றுக்குள்ளே பொன்னும் வைரமும் புதைந்து கிடக்கும்வரையும், அவைகள் எவருக்கும் பயனற்றவை மனிதனது பணி அதைத் தோண்டி வெளியேயெடுத்து, அதற்குப் பெறுமதியைக் கொடுக்கிறது. இப்படிப் பார்க்கும்போது பணிபுரிந்த தொழிலாளியே அவைகளை உண்டாக்கியவன் என்பது வெளியாகிறது.

-மகாத்மா காந்தி.

# "அன்று எம்மை கிண்டல் செய்தவர்கள் இன்று என்ன செய்கிறார்கள்?"

## காங்கிரஸ் பிரமுகர் கேள்வி

(கொழும்பு)

நாம் பொருளாதாரத்திட்டங்களை வலியுறுத்திப் பேசியபோது பாலம் முக்கியமா உரிமை முக்கியமா என்று கிண்டல் செய்தவர்கள் இன்று அமைச்சர்களை வரவேற்று பொருளாதாரத்தை வலியுறுத்திப்பேசுகிறார்கள் என்றுசட்டத்தரணி மோதிலால்நேரு அண்மையில் நடைபெற்ற அ. இ. தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அமரர் ஜி. ஜி பொன்னம்பலம் இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

கிளைத்தலைவர்சட்டத்தரணி திரு. சு. சரவணமுத்துவும். அரசாங்க எழுதுசேவையாளர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. விஞயகமூர்த்தியும் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவப்படத்திற்கு மாலை சூட்டி அஞ்சலி செய்து மங்கள விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்துவைத்தனர்.

மறைந்த தலைவர்கள் ஜி.ஜி. பொன்னம்பலம், வே. குமாரசாமி, ந. நடராசா மற்றும் மறைந்த கொழும்புக்கிளை அங்கத்தவர்கள், தமிழாராய்ச்சி மகாநாடு, புத்தளம் பள்ளிவாசல் சம்பவம், 77 ஆகஸ்ட் கலவரம், கிழக்கு மாகாணத்தில் வீசிய சூறுவளி ஆகியவற்றின் போது உயிர் இழந்தோர் ஆகியோருக்கு அஞ்சலி செய்யுமுகமாக 2 நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆண்டறிக்கையும் நிதிஅறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்து தலைமையுரை நிகழ்த்திய சட்டத்தரணி சு. சரவணமுத்து கட்சியின் தோற்றம், கட்சியாற்றியபணி, கட்சி அங்கத்தவர்கள் கட்சியை வளர்க்க எடுக்கவேண்டியபணிகள் பற்றி எடுத்துரைத்தார்.

பின் கட்சியின் தலைமைப் பீடத்தின் சார்பில் திருவாளர்கள் மு. க. இரத்தினவேற்பிள்ளை, மோதிலால்நேரு, கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றினர். திரு. இரத்தினவேற்பிள்ளை பேசுகையில் அமரர் ஜி. ஜி. கூட்டணியைப் பற்றி என்ன கருத்துக்கொண்டிருந்தார் என்பதையும் அவர் விடுத்த கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதாலேயே அவர் கூட்டணி மேடைகளில் தோன்றவில்லை என்றும் அத்துடன்காங்கிரஸ் ஆதரவாளர்களிடம் அதன் புனர்நிர்மாணம் பற்றியும் வலியுறுத்திஞர் என்றார்.

அடுத்துப்பேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஏன் மகாநாடு குறிப்பிட்ட தினத்தில் நடைபெறவில்லையெனவிளக்கி அண்மையில் கூடிய கட்சியின் செயற்குழு, பொதுச்சபையை விரைவில் கூட்டும்படி தன்னைப் பணித்துள்ளதால் அது விரைவில் கூட்டப்படுமென்றும் கட்சியின் தலைமைக் காரியாலயம் பத்திரிகை ஆதியன விரைவில் இயங்கத்தொடங்குமென்றும் கூறினர்.

சட்டத்தரணி திரு. கு. மோதிலால்நேரு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சென்ற தேர்தல் காலங்களில் எனக்கும் திரு.பொன்னம்பலத்திற்கும் வாக்களித்தால் அது அமைச்சர்களுக்கு விருந்தளிக்கவும் மாலை சூட்டவும் உதவுமேயன்றி தமிழ்பேசுமினத்தின் விடுதலைக்கு உதவாது என்று கூறிய கூட்டணியினர் இன்று அமைச்சர்களுக்கு பூமாலை சூட்டி போட்டியிட்டு விருந்தளிப்பதேன்? அன்றுகிட்டங்கள் இன்றி வீரம்பேசியோர் அரசாங்கத்தின் அவசரகாலச்சட்டத்தால் ஆட்டம் கண்டுள்ளனர். அதனற்றான் தற்பொழுது வீரம் பேசாது தம் நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முனைகிறார்கள். கடந்த பொதுத்தேர்தலிலும் நடந்துமுடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலும் காங்கிரசும் அதன் ஆதரவாளர்களும் பொருளாதாரத்தை வலியுறுத்திய போது பாலம் முக்கியமா? உரிமை முக்கியமா? என்று கிண்டலாகக்கேட்ட கூட்டணியினர் இன்று பொருளாதார அபிவிருத்தியை வலியுறுத்தி அமைச்சர்களை வரவேற்பது, அவர்கள் எதனையும் காலத்தாழ்த்தியே யுணர்வார்கள் என்பதுடன் நிலையான கொள்கையற்றவர்கள் என்பதனையும் காட்டுகின்றது என்றார்.

நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. பின் வருவோர் அவ்வப்பதவிகளுக்கு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சட்டத்தரணி திரு. சு.சரவணமுத்து, துணைத்தலைவர்கள்: சட்டத்தரணி திரு. கு. மோதிலால் நேரு, சட்டத்தரணி திரு. ஈ. டபிள்யு. தேவராசா, செயலாளர்: திரு. கே. ரி. எம். விஜயகுமார், துணைச்செயலாளர்: திரு. என். எஸ். எஸ். மனோருஜ், பொருளாளர்: திரு. ச. வைரவநாதன், துணைப் பொருளாளர்: திரு. ஆர். எஸ். நாகேந்திரா. செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### மக்கள் கருத்

## யாழ். நகர் அழகு பெறுமா?

சீன தேசத்தின் அழைப்பின் பெயரிலும், பிரதம மந்திரி பிரேமதாசாவின் பணிப்பின் பெயரிலும், இலங்கையடங்கிலுமுள்ள ஒன்பது மாநகர முதல்வர்கள் (யாழ். மாநகர முதல்வர் உட்பட) கொழும்பு மாநகர முதல்வரின் தலைமையில் சீன சென்று பின் ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய தேசங்களுக்குச் சென்று வந்தமை யாவரும் அறிந்ததே. இந்த விஜயத்தின் பலாபலன்களை அறியக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர்களில் ஒன்பது மாநகர முதல்வர்களில் யாழ். நகர முதல்வர் முன்னணியில் நிற்கிறரென்பது எனது பணிவான அபிப்பிராயமாகும். அழகு தமிழில் வரவேற்கவேண்டிய பழமொழி ஒன்றுள்ளது. அதாவது தான் கற்ற கல்வியை தன்னகத்தே வைத்திருப்பவனும், தான் தேடிய செல்வத்தைத் தானே அனுபவிக்கிறவனும் மனித சமுதாயத்திற்கு உபயோகமில்லாதவர்கள் என்பதுதான். ஆனல் யாழ். நகர முதல்வரோ இதற்கு எல்லா வழிகளிலும் விதிவிலக்கானவர். வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு தாய் நாட்டிற்கு வந்ததும், யாழ். நகர முதல்வர் முதலில் யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கு ஆற்றிய 45 நிமிட நேர பேச்சிலும், பின்பு பல வரவேற்பு உபசாரக் கூட்டங்களிலும், தாம் வெளிநாட்டு விஜயத்தின்போது உணர்ந்த, புகட்டவேண்டிய அனுபவங்களை ஆணித்தரமாக உணர்ச்சிததும்ப எடுத்துக் கூறியுள்ளார்.

யாழ். மாநகர முதல்வரின் பிரசங்கத்தின் சாராம்சம் என்னவென்றல், இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் பேணிப் பாதுகாக்கக்கூடிய (பிர) தேசப்பற்று, மொழிப்பற்று, ஒழுக்கம், ஊக்கம், துப்புரவு ஆகியன பிரதானவைகளாகும் என்பதே.

முதல்வர் சீன தேசத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அந்நாட்டு மக்களின் தேசாபிமானம்பற்றிக் குறிப்பிட்டார். அந்நியர்களிடமிருந்து தங்கள் நாட்டைக் காப்பாற்றுவதற்காக இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்குமுன் நிர்மாணிக்கப்பட்ட சீனப் பெருஞ் சுவர் கிட்டத்தட்ட மூவாயிரம் மைல்கள் நீளமாகும். மேலும் தேசாபிமானத்தைப் பற்றி முதல்வர் குறிப்பிடுகையில், "பிற நாட்டு உதவியை எதிர்பார்க்காமல், தங்களுக்கு வேண்டிய உணவு தானியங்களையும், ஏனையனவற்றையும் பெற்றுக்கொள்ள தங்கள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி விடாமுயற்சியுடன் செயல்படுகிறர்கள்" என்றர். அரசியலில், சீன கம்யூனிச நாடாக இருந்தபோதிலும், அங்கு சகல இன மக்களும் சமத்துவமாக வாழ்கிறர்கள். அங்கு ஹான் இன மக்களே பெரும்பான்மையினர் என்றலும் சிறுபான்மை இனத்தவர் துன்புறுத்தப்படுவதில்லை. கற்பழித்தலுக்கு மரணதண்டனையென்றல் சீன அரசியலமைப்பின் மிகுதியைச் சொல்லத் தேவையில்லை.

அடுத்து தென்கிழக்காசியாவின் பூலோக சுவர்க்கம் எனப்படும் நாடாகிய சிங்கப்பூருக்கு வருவோம். கிட்டத்தட்ட 200 சதுரமைல் கொண்ட சின்னஞ்சிறு தீபகற்பம்தான் சிங்கப்பூர். அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டையொத்த அளவே சிங்கப்பூராகும். முதல்வர் தமது உரையின்போது பல மொழி பேசும் இன மக்கள் எல்லாச் சுதந்திரங்களுடன் அதாவது குடியுரிமை, பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இவையெல்லா உரிமைகளுடன் சந்தோஷமாக வாழ்கிறர்கள் என்று முதல்வர் சொன்னர். அங்கு வீடில்லாப் பிரச்னைகளுக்காகத் தொடர்மாடி வீட்டுத்திட்டங்கள் ஏராளம் உள. குறைந்தது ஏழடுக்கு மாடிகளையே அங்கு காணக்கூடியதாகவிருக்கின்றதாம்.

அடுத்தது முதல்வர் சிங்கப்பூரில் கண்ட உண்மை துப்புரவு. என்நேரமும் குப்பை கூழங்களற்றநகரகமாச் சிங்கப்பூர் காட்சியளிக்கிறதாம். அதற்கு அங்கு வாழும் பல இனமக்களின் ஒற்றுமையும் ஊழியர்களின் கடமையுணர்வுமே காரணமாம். வீதியில் சென்று கொண்டிருக்கும் ஒருவர் சிகரட்பற்ற வேண்டுமானல் நெருப்புக் குச்சியைத் தட்டி சிகரட்டைப்பற்றவைத்தவுடன் குச்சியை தன்னகத்தே கொண்டு சென்று குப்பை கூழங்களைப்போட வேண்டிய இடத்தில் போட வேண்டும். தப்பித்தவறி அலுவல் முடிந்ததும் நிலத்தில் எறிவோராகில் ஸ்தலத்திலே மாநகர அதிகாரிகளால் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவாராம். இன்னெரு விஷயம் அங்கு தேவையற்ற கடதாசித் துண்டை மக்கள் வீதியில் கண்டால் உடனடியாக எடுத்து, போடவேண்டிய இடத்தில் போடுகிறர்கள். என்னே தேசிய உணர்வு.

எங்கள் மாநகர முதல்வரின் உபதேசத்தை யாழ். நகர வரியிறுப்பாளர்களும், பொது மக்களும் ஒன்றிணைந்து ஏற்று நகரத்தை சிங்கப்பூர் போன்று அழகாக வைத்திருக்க முதல்வருக்கும், மாநகராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும், ஆணையாளருக்கும், மாநகர ஊழியர்களுக்கும் ஒத்துழைப்பு நல்க நகர முதல்வரின் வெளிநாட்டு அனுபவங்கள் அனுகூலமாகட்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்,

கண்ணபுரம் [illegible]
யாழ்ப்பாணம்.

### நாடும் நடப்பும்

கைத்தறி நெசவாளருக்கு வாழ்வளிக்கும் முகமாக கைத்தறிப்புடவைகளை விடுவீடாகக் கொண்டு சென்று விற்பனை செய்யும் இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இளைஞர் பேரவை தீர்மானித்திருக்கிறது.

இச்செய்தியைப் படித்த ஒருநண்பர் இது 'நல்ல இயக்கம் தான் ஆனல் காலங்கடந்த இயக்கம்; இன்றுள்ள நிலையில் இது வெற்றியளிக்குமா என்பதே கேள்வி' என்றர்.

இந்திய நாட்டுக்கு விடுதலை தேடிக்கொடுக்கப் போராட்டம் நடத்திய காந்தி மகாத்மா, தமது போராட்டத்திட்டங்களில் அந்நியத் துணிப்பகிஷ்கரிப்புதீண்டாமை ஒழிப்பு சீதனஒழிப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளித்தார்.

திராவிட நாடு கோரிய அறிஞர் அண்ணவும் கைத்தறி நெசவாளரைக் கைதூக்கிவிடுவதற்காக விடுவீடாகவும் வீதிவீதியாகவும் சென்று கைத்தறிப்புடவைகளை விற்று ஊக்கமளித்தார்,

காந்திமகான் ஆரம்பித்த கைராட்டை இயக்கமும் அந்நியத்துணிபகிஷ்காரமும் இந்திய மக்களிடம் ஊறிப்போய் விட்டதால் இன்றும் இந்தியாவில் கைத்தறி உற்பத்திக்கு ஊக்கம் இருந்து வருகிறது.

ஆனல் நமது நாட்டில் நிலைமை வேறு. அன்று தொடக்கம் இன்றுவரையும் அந்நியமோகம் அணுவளவும் குறையவில்லை.

இன்று மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்கள் தமது குடும்பத்திலுள்ளவர்களுக்கு அந்நாடுகளிலிருந்து விலையுயர்ந்த துணிகளையும் உடுபிடவைகளையும் அனுப்புகிறர்கள். இங்கு அவற்றை அணிந்து செல்பவர்களைப் பார்த்து இங்கு குறைந்தவருமானம் பெறுபவர்களும் கடன்பட்டோ கஷ்டப்பட்டோ வெளிநாட்டுத் துணிகளையும் உடுபிடவைகளையும் வாங்கிக் கொடுத்தே ஆகவேண்டியிருக்கிறது.

இன்றுள்ள நிலையில் கைத்தறி ஆடைகள் காட்சிப் பொருள்களாகி விட்டன வென்றே சொல்ல வேண்டும். யாழ்ப்பாணம் செயலகத்தில் கைத்தறி ஆடைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன.

வெளிநாட்டுத் துணிகளும் உடுபிடவைகளும் தாராளமாக இறக்குமதியாகும் போது உள்நாட்டு உற்பத்திக்கு கிராக்கியிருக்க முடியுமா?

ஃ ஃ

யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சேனதிராசாவின் மூக்குக் கண்ணடி தொலைந்து விட்டதாம். யாராவது கண்டெடுத்தால் அவரிடம் சேர்ப்பித்துவிடுங்கள்.

ஃ ஃ ஃ

நேற்றுக்காலை எனது நண்பர் ஒருவர் கோயில் வாசலில் நின்று பக்தியோடு வழிபட்டுக் கொண்டிருந்தார்.

'என்ன விசேஷம்'? என்று கேட்டேன் "விசேஷம் என்ன? வீட்டில் மனைவி முணுமுணுக்கத் தொடங்கினள் அமைதியைத்தேடி ஆலயத்துக்குத் தானே செல்லலாம்" என்று பதிலளித்த அவர் திருப்பி என்னைப் பார்த்து'என்ன விசேஷம்' என்று கேட்டார்,

(7-ம் பக்கம் பார்க்க)

### நாட்டின் காலநிலை:

## ஒருமாத காலத்துக்கு வறட்சி நீடிக்கும்

(கொழும்பு)

நாட்டின் கால நிலையைப் பொறுத்தவரை இன்னும் ஒரு மாத காலத்திற்கு நாட்டில் வறட்சி நிலவுவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக வானிலை அவதானநிலையம் எச்சரித்துள்ளது.

வழமையான மழைவீழ்ச்சி இம்முறை இடம்பெருதெனவும் அதுமேலும் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் மழை வழமையிலும் குறைவாகவே இருந்ததாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது;

(வெ)

## மொறட்டுவ பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் பி. டி. குணத்திலகா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாணவர்களின் நலன்களையும், நிர்வாக வேறுபாடுகளையும் மேற்பார்வை செய்யும் தகுதி வாய்ந்த அதிகாரியாக இவர் கல்வி, உயர்கல்வியமைச்சர் கலாநிதி நிசங்கா விஜய[illegible] நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் பல்கலைக்கழக சபையின் அங்கத்தவராக விருந்த பேராசிரியர் குணத்திலகா, விஞ்ஞான பீடாதிபதியாகவும் கணிதப் பேராசிரியராகவும் கடமையாற்றி வந்தார். மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் முன்னுள் உப-வேந்தர் பேராசிரியர் குறுப்பு இயந்திரவியல் பேராசிரியராக மேற்படி பல்கலைக்கழகத்தில் பதவியேற்றுள்ளார்.

(வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்மொழி உரிமைகளை உடன் அமுல் படுத்தவும்"

## ஜனதிபதிக்குப் பண்டிதர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் புதிய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ் மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

பண்டிதர் இரத்தினம் கடந்த சில மாதங்களில் தனக்கு அனுப்பப்பட்ட தனிச் சிங்களக் கடிதங்கள் சிலவற்றையும் ஜனதிபதிக்கு அனுப்பியுள்ளார். அவரது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

''நீங்கள் எனக்கு 30-12-78ல் அனுப்பிய கடிதத்தில் 'தமிழில் எழுதப்படும் எல்லாக் கடிதங்களுக்கும் தமிழில் பதில் அனுப்பப்படல் வேண்டுமென அரசாங்க நிறுவனங்கள் அனைத்திற்கும் அறிவுறுத்துரைகள் வழங்கப்பெற்றுள்ளன'' எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். தமிழ் மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அறிவிக்குமாறு நான் கேட்டதற்கு, இதற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் 12-2-79 ல் எனக்கு எழுதிய கடிதத்தில் ''நடைமுறைப்படுத்துதற்கு முதலில் சட்ட ஆலோசனை பெறப்படுவதாக அறிவித்தார்.

''மீண்டும் நீங்கள் எனக்கு எழுதிய 17-5-79 ம் திகதிக் கடிதத்தில் ''தமிழ் மொழி உபயோகத்தைச் செயற்படுத்தல் சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையை எனது அமைச்சர்கள் பின்பற்றவேண்டும் என அவர்களுக்கு நான் அறிவுறுத்துரைகள் வழங்கியுள்ளேன். இவ்வறிவுறுத்துரைகளானவை எழுத்துருவில் அமைந்த ஆவணமாக்கப்படவில்லை'' எனக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

''புதிய அரசியல் அமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பதினேழு மாதங்களாகியும் இன்றுவரை தமிழ் மொழி உரிமைகளைச் செயற்படுத்துவதற்கு உங்கள் அரசாங்கம் எவ்வித அறிவுறுத்துரைகளையோ, பணிப்புரைகளையோ எழுத்துருவில் வெளியிடவில்லை என்பதையும் தமிழ் மக்கள் இன்றுவரை புதிய அரசியல் அமைப்பு வழங்கும் மொழியுரிமைகளைப் பெறவில்லை என்பதையும் இதனால் அவர்கள் தொடர்ந்து பெரும் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (கு'')

### கடன் கிடைக்கவில்லை

[மன்னர்]

4ஆயிரம் ரூபா வீடமைப்பு கடன்கோரி விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை கடனுதவியில் ஒருபகுதிதானும்கிடைக்கவில்லை.

மன்னரிலிருந்து அனுராதபுரம் தேசியவீடமைப்பு இலாகாவிற்கு இலாகாவின் நிபந்தனைப்படி சகல விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பியும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையாம். (கு)

## மிருதங்க அரங்கேற்றம்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரும், மிருதங்க வித்துவானுமான திரு.ப.சின்னராசாவின் மாணவியும் நடேஸ்வரக்கல்லூரிஅதிபர் திரு. பொன். சோமசுந்தரம் தம்பதிகளின் கனிஷ்டபுதல்வியுமான செல்வி சுந்தரகுமாரியின் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வரங்கேற்றத்திற்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவும் பாரியாரும் முதன்மை விருந்தினர்களாகவும், வட மாநிலக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவருமாகிய திரு. தி. மாணிக்கவாசகரும் அவரது பாரியாரும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (கொ)

## "ஆப்கானுக்கு சோவியத் உதவியதில் தவறில்லை"

(உடுப்பிட்டி)

''ஆப்கானிஸ்தானில் நடந்தேறியபுரட்சி சோஷலிசத்தை நோக்கி வழிநடத்திச்செல்லும் ஒரு புரட்சியாகும். இது ஆப்கானிஸ்தானின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட ஒரு புரட்சியாகும். சோஷலிசப் பாதையில் செல்லும் 'ஆப்கான்' ஏகாதிபத்தியநாடுகளின் ஊடுருவலிலிருந்து தம்மைப் பாதுகாக்க சோவியத்யூனியனிடமிருந்து உதவிகோரியதில் தவறேதும் இல்லை''

இவ்வாறு ஆப்கானிஸ்தானில் சோவியத்தலையீடுபற்றி இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின யாழ்.மாவட்டச்செயலாளர் திரு.பொன். குமாரசாமி விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளார். (கு)

### ஆரம்பநீதிமன்றம்

[மன்னர்]

திருக்கேதீஸ்வரத்தில்ஆரம்ப நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை மன்னர் ஆரம்ப நீதிமன்ற நீதவான் திரு.வ.சிதம்பரநாதன்திறந்து வைத்தார்.

மன்னர்மாவட்டத்தில் இதுவரை 5 ஆரம்ப நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. [கு]

### வாராந்த பஜனை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமிதியின் வாராந்த பஜனைகள் இம்மாதம் தொடக்கம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகலில் மானிப்பாய் பட்டினசபை மண்டபத்திலுள்ள சிறுவர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

### புதிய ஒன்றியம்

(புலோலி)

யாழ்.மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. வீ. கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வீ. கே. மாணிக்கம் (பருத்தித்துறை), செயலாளர்: திரு. என். கனகசிங்கம்(கிளிநொச்சி), பொருளாளர்: ஏ. செல்வராசா (சோண்டாவில்)

அத்துடன் 15பேர் கொண்ட ஆளுகைக்குழு வொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### ஜனதா செயலாளர் ராஜினமா

(புதுடில்லி)

அந்தமான்தீவு ஜனதாக் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எஸ். வி. சுப்பிரமணியம் தமது பதவியிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினமாச் செய்துள்ளார்.

பொதுச்செயலாளராக விருந்த திரு. சாந்தி கிருஷ்ண அண்மையில் ராஜினமாச் செய்துவிட்டு இந்திரா காங்கிரஸ்கட்சியில் சேர்ந்து கொண்டதையடுத்தே திரு. சுப்பிரமணியன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (கு)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 762வது சுவீப் சிட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**21 S 0681**
ரூபா 1,00,000

இரண்டாம் பரிசு
**19 M 0594**
ரூபா 40,000

மூன்றும் பரிசு
**06 S 0336**
ரூபா 10,000

ரூ. 1510-80 சகம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0787 | 05 A 0915 |
| 08 A 0192 | 13 A 0854 |
| 22 A 0277 | 22 A 0840 |
| 24 A 0443 | 27 A 0257 |
| 06 B 0036 | 06 B 0680 |
| 09 B 0142 | 10 B 0729 |
| 11 B 0308 | 16 B 0679 |
| 19 B 0825 | 27 B 0771 |
| 23 B 0382 | 30 B 0514 |
| 15 C 0786 | 09 C 0178 |
| 16 C 0510 | 17 C 0 32 |
| 19 C 069[illegible] | 22 C 0934 |
| 23 C 0248 | 26 C 0027 |
| 27 C 0020 | 03 D 0063 |
| 07 E 0215 | 12 E 0 20 |
| 03 F 0966 | 06 F 0887 |
| 13 F 0743 | 06 G 0240 |
| 11 G 0036 | 13 G 0498 |
| 18 G 0111 | 02 H 0267 |
| 08 H 0925 | 21 H 0541 |
| 25 H 0263 | 29 H 0481 |
| 02 J 0710 | 03 J 0822 |
| 02 K 0505 | 03 K 0154 |
| 07 K 0608 | 10 K 0527 |
| 14 K 0930 | 17 K 0619 |
| 27 K 0988 | 01 L 0604 |
| 19 L 0250 | 04 M 0940 |
| 21 M 0718 | 29 M 0333 |
| 22 N 0710 | 30 N 0220 |
| 08 O 0978 | 15 O 0979 |
| 16 O 0190 | 23 O 0398 |
| 29 O 0370 | 12 P 0837 |
| 01 Q 0640 | 03 Q 0254 |
| 09 Q 0056 | 13 Q 0091 |
| 15 Q 0129 | 19 Q 0768 |
| 21 Q 0645 | 28 Q 0067 |
| 18 R 0337 | 21 R 0767 |
| 26 S 0328 | 26 S 0556 |
| 13 T 0426 | 19 T 0070 |
| 25 T 0158 | 10 U 0145 |
| 17 U 0167 | 18 U 0573 |
| 11 V 0164 | 19 V 02[illegible]6 |
| 21 V 0604 | 23 V 0075 |
| 23 V 0685 | 25 V 0537 |
| 02 W 0535 | 08 W 0731 |
| 14 W 0318 | 26 W 0903 |
| 27 W 0795 | 19 X 0059 |
| 09 Y 0091 | 02 Z 035 |
| 09 Z 0482 | 13 Z 0134 |
| 26 Z 0703 | 30 [illegible] 0316 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

# மலேசிய இந்து இளைஞர் பேரவையின் சிறப்பு மாநாடு

மலேசிய இந்து இளைஞர் பேரவையின் 17 வது தேசிய சிறப்பு மகாநாட்டில் மலேசிய இந்து இயக்கப் பிரதிநிதிகளும், வெளிநாடுகளிலுள்ள இந்து இளைஞர் இயக்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து சுமார் 650 பேர் கலந்துகொண்டனர். பேராளர்கள் வராத சில நாடுகளிலிருந்து ஆசிச் செய்திகளும் ஆதரவு அறிக்கைகளும் அனுப்பியிருந்தனர்.

கோலாலம்பூர் செருஸ் வீதியில் உள்ள விஞ்ஞான உயர்நிலைப் பள்ளியில் கடந்த ஆண்டு மார்கழி 27-ம் திகதி தொடங்கி தொடர்ந்துநான்கு நாட்களாக மலேசிய பண்பாட்டு இளைஞர் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவுடன் இம்மாநாடு நடைபெற்றது. 'பல இச்சமுதாயத்தில் சமய சகிப்புத்தன்மை' என்னும் கருப்பொருளை இம்மாநாடு கொண்டிருந்தது.

திரு.அ.வைத்திலிங்கத்தைத் தலைவராகவும், திரு.சி. இராசரத்தினத்தைச் செயலாளராகவும் கொண்ட ஏற்பாட்டுக் குழுவினர் மாநாட்டுப் பணிகளில் முழுநேரமும் ஈடுபட்டிருந்தனர். வெளிநாட்டிலிருந்து வந்தபேராளர்களை திரு பி. எஸ், நாதன் திரு.ராமநாதன் ஆகியோர் தலைமையிலான குழு வரவேற்று இருப்பிடம், உணவு, போக்குவரத்து வசதி ஆகியவற்றைச் செய்து உதவினர். மார்கழி 20ந் திகதி தொடக்கம் 26ம் திகதிவரை வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை அவர்களது இந்து இளைஞர் மன்றங்களின் விஜயங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### இ. தவகோபால்
(யாழ். நல்லூர் இ.இ.மன்றம்)

பிரதிநிதிகளை பகாங் மாநிலத்திலுள்ள 'ஜெரண்ட்' என்னுமிடத்திலுள்ள இந்து இளைஞர் இயக்கத்திற்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (இது கோலாலம்பூரிலிருந்து 155 மைல்கள் அப்பால்) அவர்கள் திரு.லோகநாதன் தலைமையிலான குழுவுடன் இந்து மதம்பற்றி கலந்துரையாடியபின் அவ்வூர் முருகன் ஆலயத்தின் மகிமையைக் கண்டறிந்தோம்.

மகாநாட்டின்போது சமய கலை, இலக்கிய, விளையாட்டுத்துறைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. முதல்நாளன்று பேராளர்கள் பதிவுடன் மகாநாடு தொடங்கியது. பின்னர் பேராளர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் வண்ணம் ஒன்றுகூடும் நிகழ்ச்சி இடம் பெற்றது. அப்போது ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளாக மாறுவேடப்போட்டி இடம் பெற்றது. இதைத்தொடர்ந்து விளக்கவுரை இடம்பெற்றது. மாநாட்டின் போது பேராளர்களது நடைமுறை. போட்டி விவாதங்கள், மாற்றங்கள் போன்றவை முடிவு செய்யப்பட்டன. மலேசியத் தொலைக்காட்சியில் இரண்டாம் ஒளி அலையில் ''தும்பான் மீங்கு'' என்னும் நிகழ்ச்சி ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 7 மணிக்கு காண்பிக்கப்படும். இதில் 22-12-79 அன்று சுஜாம் இந்து இளைஞர் இயக்கத் தலைவர் திரு. பீதாம்பரம் அவர்கள் இந்து இளைஞர் இயக்கம் பற்றியும், அதன் 17வது சிறப்பு மாநாட்டைப்பற்றியும் 15 நிமிடம் விளக்கவுரை ஆற்றினர்.

மார்கழி மாதம் 28ம் திகதி சிறப்பு மாநாடு ஆரம்பமாகியது.

# ஊவாப் பகுதியில் பல்கலைக்கழகம்

(கொழும்பு)

ஊவாப் பிராந்தியத்தில் புதிய பல்கலைக்கழகமொன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அறிக்கையொன்றை ஆராய்ந்து சமர்ப்பிப்பதற்காக ஏழுபேரைக் கொண்டகுழுவொன்றைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமித்துள்ளது.

இக்குழுவின் தலைவராக [illegible] எம். ஆர். கொப்பேகொட கடமையாற்றுவார், பேராசிரியர்கள் எஸ். இராமகிருஷ்ண, பி. [illegible] லகன்வஸ்கல, டி. தர்மசேன, பி. டி. குலதிலக, எச். எம். குணசேன, பதுளை அரசாங்க அதிபர் ஆகியோரும் கடமையாற்றுவார்கள். இவர்கள் அமைக்கப்படவுள்ள பீடங்கள் பற்றியும், சேர்த்துக்கொள்ளப்படவுள்ள மாணவர்கள் பற்றியும் தமது அறிக்கையில் எடுத்துக் கூறுவார்கள். (நா)

அயத்தொ...
பணயக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...யத்தொல்லா பணித்தால் ...ணயக்கைதிகள் விடுதலை!

தெஹ்ரான், பெப்.1 ...னில் பணயம் வைக் ...டிருக்கும் 49 அமெரிக்க ...ரிகளையும் மதத்தலைவர் ...தொல்லாத் கொமெய்னி ...ணிப்பின் பேரிலேயே ...லை செய்வோம் என்று ...ளைப் பணயம் வைத் ...ஈரானிய மாணவர் ...தரிவித்துள்ளனர்.

...காரிகள் மூன்றாவது ...னரிடம் ஒப்படைக்கப் ...ட்டார்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

பணயக்கைதிகள் சர்வதேச சபையிடம் ஒப்படைக்கப்படலாம் என்று வாஷிங்டனில் வெளியான செய்தி குறித்து நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மாணவர்கள் மேற்சண்டவாறு கூறினார்கள்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனப் பாணி சதார் உத்தரவிட்டாலும் தாம் அவர்களை விடுதலை செய்யப்போவதில்லை என்றும் தெரிவித்த மாணவர்கள் தமது இலட்சியம் நிறைவேறும் வரை தொடர்ந்து பணயம் வைத்திருக்கப் போவதாகக் கூறினார்கள். (கு)

...

...த் தொடர்ச்சி)

...மைச்சர் திரு. ஷெல் ...னராஜா கருத்துத்தெரி ...யில், இப்பிரச்னைகள் ...நீதியமைச்சருடன் கலந் ...ாடி நடவடிக்கை எடுப் ...உறுதியளித்ததுடன், ...ாழ்து டண்ணையில் ஒரு ...பூர்த்திசெய்யப்பட்...த் ...பொதுத் தொடர்புத் ...ளத்திடம் வழங்கப் ...கட்டிடத்தை மீண்டும் ...திமன்றத் தேவைகளுக் ...யன்டுத்துவது பற்றி ...மச்சருடன் கலந்துரை ...தற்கான நடவடிக்கை ...மேற்கொள்வதாகவும் ...சட்டத்தரணிகளிடம் ...ளித்தார்.

...லந்துரையாடலில் நீதி ...ஆணைக்குழுவின் காரிய ...ரு. விஜயதுங்க, நீதி ...ின் செயலாளர் திரு. ...பி, வெத்தசிங்க ஆகி ...கலந்துகொண்டனர். (வெ)

## நீதிமன்றத்தில் ஆஜராக சுக்ளாவுக்கு உத்தரவு

புதுடில்லி, பெப்.1 முன்னாள் இந்திய செய்தி, ஒலிபரப்பு அமைச்சர் திரு. சுக்ளாவை இம்மாதம் 18ந் திகதி டில்லி விசேஷ நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தேர்தல் சுவரொட்டி வழக்கு இன்று காலை டில்லி விசேஷ நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம். எஸ். ஜோஷி முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது திரு. சுக்ளாவோ அல்லது அவரின்சார்பில் வழக்கறிஞரோ ஆஜராகவில்லை.

1977ல் நடைபெற்ற இந்திய பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலில் அரசுக் கலைஞர்களுக்குப் பணம்கொடுக்காமல் சுவரொட்டிகளைத் தயாரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (கு)

## இன்று

(யாழ்ப்பாணம்)

கோயம்புத்தூர் பேரூர் மடத்தலைவர் தவத்திரு வித்துவான் சாந்தலிங்க இராமசாமி அடிகளும் அன்பர்களும் இன்று மாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

ஸ்தல யாத்திரையை மேற்கொண்டு ஈழநாட்டுக்கு விஜயம் செய்துள்ள தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளும் அன்பர்களும் இன்று மாலை குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கு விஜயம் செய்து பஜனையும் நடத்துவர்கள். (கொ)

......

## நிறைச் சறைந்த பாண்விற்பனை: ஒத்திவைக்கப்பட்ட சிறை

(யாழ்ப் ாணம்)

ஒருறுத்தல் பாண் என்று கூறி பதினொன்றே முக்கால் அவுன்ஸ் பாணை விற்பனை செய்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஐந்நூறு ரூபா அபராதமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருமாதக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

காரைநகரிலுள்ள கடை ஒன்றில் ஒருறுத்தல் பாண் எனக்கூறி பதினொன்றே முக்கால் அவுன்ஸ் பாணை விற்பனை செய்ததைக் கண்டுபிடித்த யாழ். செயலகத்தைச் சேர்ந்த விலைக்கட்டுப்பாட்டதிகாரிசள் மேற்படி கடையின் உரிமையாளருக்கு எதிராக ஊர்கவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இவ்வழக்கிலேயே மேற்கண்ட தீர்ப்புவழங்கப்பட்டது (கொ-இ)

## நிரந்தர நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். அரசாங்க செயலகத்தில் கடந்த பல வருடங்களாக சமயா சமய ஊழியர்களாக கடமையாற்றிய 10 தொழிலாளர்கள் இம்மாதம் தொடக்கம் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர். அத்துடன் இரண்டு காவலாளிகளுக்கும் நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. (சு)

## ராணுவத்தளபதியின் திடீர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ராணுவத்தளபதி திரு டெனிஸ் பெரேரா நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஹெலிகப்டர் விமான மூலம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ராணுவத்தளபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்பட்டுவரும் ராணுவநடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் கொழும்பு திரும்பினார். (கொ-கு)

## தூதரகத்தில் தீ! 30 பேர் பலி!!

நியூயோர்க், பெப். 1 கௌத்தமாலாவிலுள்ள ஸ்பானிஷ் தூதரகத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 30 அதிகாரிகள் கருகி மாண்டனர்.

தூதரகத்தில் கிளர்ச்சி செய்த விவசாயிகள் தூதரகத்தைக் கைப்பற்றி அங்குள்ள சிலரைப் பணயம் வைத்திருந்த சமயம் தூதரக அதிகாரிகளை விடுவிப்பதற்காக பொலிசார் முயன்றபோதே இத் தீவிபத்து ஏற்பட்டது.

ஸ்பானிஸ் தூதுவர் தூதரகத்தைவிவசாயிகள் கைப்பற்றிய பின்னர்பின்பக்கக் கதவு வழியாகத்தப்பி விட்டதாகத் தெரிய வருகிறது. (கு)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில்

## பெண்ணின் சங்கிலியும் பணமும் அபேஸ்! பிரயாணிகள் துரத்தியும் இளைஞர் தப்பி ஓட்டம்

புலோலி)


பஸ் நிலையத்தில் பஸ்ஸுக் காகக்காத்து நின்ற பெண் ஒருவரிடமிருந்து ஐயாயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும், பணத்தையும் பறித்துக்கொண்டு மின்னல் வேகத்தில் ஓடிமறைந்தாராம் இளைஞர் ஒருவர்.


பருத்தித்துறை பஸ்நிலையத்தில் பகல் 11 மணியளவில் பஸ்ஸுக்குக் காத்திருந்த பெண் ஒருவருக்கே இக்கதி நேர்ந்தது.

கரணவாய் உச்சில் அம்பன் கோவிலடியைச் சேர்ந்த இப்பெண், தனது மகளுடன் அறுந்த சங்கிலி ஒன்றை ஒட்டுவதற்காகக் கொண்டு வந்தாராம். இச் சங்கிலியையும் காசையும் பணப்பையில் வைத்திருந்தபோது பணப்பை இளைஞர் ஒருவரின் கண்ணில் படவே அவர் அதனைப் பறித்துக் கொண்டு ஓட அங்கிருந்த பிரயாணிகள் துரத்தியும் இளைஞனைப் பிடிக்கமுடியவில்லையாம்.

பணப்பையைப் பறிகொடுத்த தாயும் மகளும் கதறிக்கொண்டு பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்துக்குச் சென்று புகார் செய்தனர். பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்


முழுக்குடும்பத்துக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த பானம்...




'க்ளிம்' பிரசித்திபெற்ற பால்மா உற்பத்தியாளர்களான அயர்லாந்து, போர்டன் கம்பனி லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், விட்டமின் A&D நிறைந்த 28% வெண்ணெய், கொழுப்புச் சேர்த்து உலகத்திலேயே முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பால்மா. 'க்ளிம்' சுவை நிறைந்தது. நீண்ட காலம் பத்திரப்படுத்தக்கூடியதும், சுகாதாரத்திற்கேற்ப பதப்படுத்தப்பட்டதுமான தன்மையும் கொண்டது.


பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும், முன்னணி வியாபாரிகளிடமும் பெறலாம்.

மார்க்பெட்,

ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம், (வ. ம.)

127, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு-14.

தொலைபேசி: 24991-2-°.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகள் சமரசத்தைக் கைவிடுவதால்

# 3-வது உலகயுத்தம் விரைவில் தோன்றலாம்

## எந்த நிலையையும் சமாளிக்க இந்தியா தயார் என்கிறுர் இந்திரா

புதுடில்லி, பெப்.1 வல்லரசுநாடுகள் சமரசப் போக்கைக் கைவிட்டுவருவதால் மூன்ருவது உலகயுத்தமொன்று மிகவிரைவில் தோன்றலாம் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அச்சம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருக்கும் ஆஸ்திரிய நாட்டுத்தலைவர் திரு.புறூனே கிறீஸ்ரிக்கு திருமதி காந்தி தமது இல்லத்தில் அளித்த விருந்து உபசார வைபவத்தில் பேசுகையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினுர்.

இந்தியாவின் கொள்கை சுயேச்சையானது என்றுகூறிய திருமதி காந்தி, எல்லாநாடுகளுடனும் குறிப்பாக அயல் நாடுகளுடன், அமைதியுடனும், நட்புறவுடனும் இருப்பதையே இந்தியா விரும்புகிறது என்ருர்.

திருமதி காந்தி தொடர்ந்து பேசுகையில், 'ஐரோப்பாவிலும் பார்க்க ஆசியாவிலேயே இப்போது அமைதியின்மை தோன்றியுள்ளது. வல்லரசு நாடுகள் இரண்டு உலகயுத்தங்கள் நடைபெற்றபின்னரும் கூடமீண்டும் மூன்ருவது யுத்தமொன்றிற்கே தம்மைத் தயார்படுத்திவருகின்றன.

''எந்தச்சூழ்நிலையிலும் வல்லரசுகளால் இந்தியாவை அட்டிவைக்கமுடியாது. எந்த ஒரு நிலையையும் சந்திக்க இந்தியா தயாராகவே இருக்கின்றது'' என்ருர்.

ஆஸ்திரிய அதிபர் திரு. புறூனே கிறீஸ்ரி பேசுகையில் ''உலக வல்லரசுகளிடையே ஏற்பட்டுள்ளகொந்தளிப்பைத் தடுக்க சர்வதேச ரீதியில் எல்லோரும் கட்டுப்பட்டு செயல்படவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். (கு)




## தமிழகத்தில் கட்சிமாறல் தொடர்கிறது

# சௌந்தர பாண்டியன் ராஜினுமா!

சென்னை, பெப்.1 தமிழ்நாடு தொழில், ஹரிஜனநல மந்திரி திரு.பி. சௌந்தரபாண்டியன் தமிழக மந்திரிசபையிலிருந்து ராஜினுமா செய்துள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தமது ராஜினுமாபற்றித் தெரிவித்த திரு. சௌந்தரபாண்டியன்; முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தன்னை அவமானப்படுத்திவிட்டதாகக்குற்றம் சாட்டியுள்ளார். தமது வருங்காலம் பற்றி விரைவில் அறிவிப்பதாகவும் திரு. சௌந்தரபாண்டியன் நிருபர்களிடம் கூறினுர். (கு)

# இந்துசமுத்திரத்தை நோக்கி பிரான்ஸ்கப் ல்கள் விரைவு!

பாரிஸ், பெப்.1 பாரசீக வளைகுடாவிலும் இந்துசமுத்திரப் பிரதேசத்திலும் தனது கப்பல் படையை வலுப்படுத்துவதற்காக பிரான்ஸ் நவீன போர்க்கப்பலை அனுப்பியுள்ளது.

எண்ணை விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் பிரான்ஸ் கப்பல்களுக்குப் பக்கபலமாகவே இக்கப்பல்கள் அனுப்பப்பட்டிருப்பதாக பிரான்ஸ் கப்பற்படை அதிகாரியொருவர்தெரிவித்தார்.

நவீன நீர்மூழ்கிக் கப்பல்களும் போர்க்கப்பல்களும்அனுப்பப்பட்டதை நோக்குகின்ற போது பிரான்ஸ், ஆப்கானிஸ்தான், ஈரான் பிரச்னைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவே கருதவேண்டியுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (கு)

## ''ஆப்கானிஸ்தான் நெருக்கடிக்குத் தீர்வு:

# சோவியத் துருப்புக்கள் உடன்வெளியேறவேண்டும்

## அமெரிக்கத் தூதுவர்மூலம் திருமதி இந்திரா அறிவிப்பு

புதுடில்லி,பெப்.1 'ஆப்கானிஸ்தானின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சோவியத்யூனியன் துருப்புக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறியே தீரவேண்டும்'

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்,

ஆப்கானிஸ்தான் நிலைமைகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இங்கு விஜயம் செய்துள்ள 'அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் விசேட தூதுவர் திரு. கிளார்க்குடன் பேச்சுவார்த்தை நடாத்திய போதே திருமதி காந்தி தமது கருத்தை தெரிவித்தார்.

வல்லரசுகளின் சூழலால் ஆசியாவிற்கே பாதகமான நிலை ஏற்பட்டுவிடும் என்றும் திருமதி காந்தி கூறினு.

இதேவேளையில் வளைகுடாப் பகுதியில் சோவியத் யூனியன் தனது படையை அனுப்பி வைக்குமாலுல் தாம் போருக்குத் தயாராகிவிட்டோம் என்றே அறிவிப்பதுபோலவே கருத்தில் கொள்ளவேண்டும் என்று திரு, கிளார்க் கூறியுள்ளார். (கு)

## தொலைபேசியில் ஒட்டுக்கேட்கும் நவீன சாதனம்

லண்டன் பெப்.1 தொலைபேசியில் ஒட்டுக்கேட்கும் நவீன சாதனம் ஒன்று பிரிட்டனில் இயங்கி வருவதாக லண்டனிலிருந்து வெளிவரும் 'நியூஸ்ரேற்மன்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியல் தீவிரவாதிகள் தொழிலதிபர்கள் தூதுவர்கள் போன்ரேருடன் ஒட்டுக் கேட்கவே இச்சாதனம் அமைக்கப்பட்டதாகவும் பிரிட்டிஷ் பாதுகாப்புச் சேவையே இதனை இயக்கி வருவதாகவும் எழுதியுள்ள அப்பத்திரிகை இச்சாதனம் இயங்கி வரும் ஐந்து மாடிக்கட்டிடத்தின் படத்தையும் வெளியிட்டுள்ளது. (கு)

## எம். டி. எச். ஜெயவர்த்தனுவுக்கு மீண்டும் அமைச்சர் பதவி?

(கொழும்பு) முன்னுள் தோட்டக் கைத்தொழில் அமைச்சரும், கடுவெல எம்:பி. யுமான திரு. எம். டி எச். ஜெயவர்த்தனு மீண்டும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று அரசாங்க வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அடுத்த வாரத்தில் ஜனுதிபதி திரு.ஜே, ஆர். ஜெயவர்த்தனு மந்திரிசபையைப் புனரமைக்கும் பொழுது அவர் மந்திரிசபையில் திரும்பவும் சேரலாமென உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கருத்தை திரு. எம். டி. எச்- ஜெயவர்த்தனு உறுதிப்படுத்தவுமில்லை, அதே நேரத்தில் மறுக்கவுமில்லை. (வெ)

## தி. மு. க. வில் சேர்ந்தார்

சென்னை, பெப். 1 இந்திய ராஜ்ய சபையின் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினரான திருமதி நூர்ஹான் ரஷாக், தி.மு.க. வில் சேர்ந்து கொண்டார்.

தி.மு.க. தலைவர் திரு. மு. கருணுநிதி சென்னையில் நிருபர்களிடம் இத் தகவலை வெளியிட்டார்.

ராஜ்யசபையில் தற்பொழுது அ.தி மு.க.வின் பலம் 8 ஆகக் குறைந்துள்ள இதே வேளையில் தி.மு.க.வின் பலம் 4ஆக உயர்ந்துள்ளது. (கு)

## மாணவி மீது பலாத்காரம்

(காலி) பாடசாலையிலிருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவியை பலாத்காரமாகக் கற்பழித்ததாகவாலிபர்ஒருவர் கைது செய்யப்பட்டு பத்தேகம நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.பி.கே.குசுமலதா என்ற கல்லூரி மாணவியை கற்பழித்ததாகவே கே,வி. பந்துபால என்ற வாலிபர் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபரை இம்மாதம் 13 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பத்தேகம நீதவான் திரு. எஸ். வட்டேகெதர உத்தரவிட்டார். (வெ)

## ஒலிம்பிக் பகிஷ்கரிப்பு: இயக்கத்தை பிளவுபடுத்தும்

### ரஷ்யக்கமிட்டி கருத்து

மாஸ்கோ, பெப்.1 மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்போட்டிகளைப் பகிஷ்கரிக்கும் முயற்சி சர்வதேச விளையாட்டு இயக்கத்தையே பிளவுபடுத்திவிடும் என்று சோவியத்யூனியனின் ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் அரசியல் கலந்துவிடக்கூடாது என்று முன்னர் தெரிவித்த நாடுகளே இப்போது அரசியல் காரணங்களுக்காக ஒலிம்பிக்கைப் பகிஷ்கரிக்க முயன்று வருகின்றன என்றும் அக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளையில் ... டுக்கான கோடைகாலபிக் போட்டிகளை மாஸ்கோவில் நடத்தக்கூடாது என்ற அமெரிக்காவின் கோரிக்கைக்கு சுமார் அறுபது நாடுகளின் ஆதரவுகிடைக்குமென்று அமெரிக்கா நம்புவதாக வாஷிங்டனிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள சோவியத்துருப்புக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேருவிட்டால்ஒலிம்பிக் போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்றவேண்டும் அல்லது அதனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுவருவது தெரிந்ததே. (கு)

## முஸ்லிம் புரட்சியாளருக்குப் பயிற்சியளித்த

# இரண்டு சீன அதிகாரிகள் ஆப்கானில் கைது!

### நூறு குழுக்கள் இருக்கின்றன

மாஸ்கோ, பெப்.1 ஆப்கானிஸ்தானின்அரசுக்கு எதிரான முஸ்லிம் புரட்சிவாதிகளுக்குப் பயிற்சிஅளித்துவந்த இரண்டுசீன அதிகாரிகளை ஆப்கானிஸ்தான் அரசாங்கம் கைது செய்துள்ளது. இத்தகவலை ராய்ட்டர் செய்தியொன்றை மேற்கோள் காட்டி மாஸ்கோ வானொலி இன்று செய்தி வெளியிட்டது.

ஆப்கானிஸ்தானில் நாசவேலைகளுக்காக நூற்றுக்கணக்கான ஏஜண்டுகளை சீனு அங்கு அனுப்பியிள்ளதாகவும் அச்செய்தியில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஆறுகுழுக்களாக அமைக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய புரட்சி இயக்கத்தை இஸ்லாமிய நாடுகளின் மாநாடு அங்கீகரித்துள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞேஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
BOMB at 10 - 10

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
Graham Dorsey became a legend after his death.
The trouble was he was still alive...
THE MOST WANTED MEN IN THE WEST!
Charles Bronson and Jill Ireland
"FROM NOON TILL THREE"
The west will never be the Same again...but then neither will BRONSON. More Suited for adults.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-15, 4-15, 7-00, & 9-30
போன்: 7693
Zoltan Hound of Dracula

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மஞேரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
6-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10 30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
பணக்காரப் பெண்
(புத்தம் புதிய கொப்பி)

Shanthi JAFFNA Phone: 7642
Daily 5 Shows - 10-30, 2-30, 4 45, 7-00 & 9-30 p.m.
We are going to kill one passenger a minute until New York City pays us 1 million Dollars"
ROBERT SHAW... HECTOR ELIZONDA
"The Taking of Pelham One Two Three" Scope Color
Every one read it, Now you can Live it.
Action Packed! Suspense!! Thriller!!!

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 1-30, 4-15, 7-00 and 9-45 p.m.
Burt Lancaster - Dean Martin in
AIR PORT
The Great Novel.........Now A Motion Picture
Coming Soon : FRAMED BADGE 373

வெற்றிகரமான 4-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

# தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் புதிய திட்டங்கள்

(அரியாலை)

தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனத்தை அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதால், வடகுதியில் 1960-ம் ஆண்டு தொடக்கம் இதுவரை தனித்தியங்கி வந்த பல பாடசாலைகள் நன்மையடையவிருக்கின்றன.

தனித்தியங்கி வந்த பாடசாலைகள் ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனத்தை வழங்குவதில் மிகவும்கஷ்டமடைந்து வந்துள்ளன. அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் இப்புதிய திட்டத்திஞல் தனியார் பாடசாலைகளும் - அதில் பணிபுரியும் ஆசிரியர்களும் நன்மையடைவர்.

1960-ம் ஆண்டு தொடக்கம் இக்கல்லூரிகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பென்சன்உரிமை தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்குக் கொண்டு வரப்படுகிறது. இதஞல் இக்கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களைப் போல பென்சன் பெறும் தகைமையைப் பெறுகிருர்கள்.

தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்-முகாமையாளர்கள் ஆகியோர்களுக்கென கொழும்பில் கல்வியமைச்சரால் நடாத்தப்பட்ட விசேட கூட்டத்தில் அரசாங்கப் பாடசாலைகளைப் போல தனியார் பாடசாலைகளும் வருடாந்தம் இருநாட்கள் பாடசாலைகள் நடாத்த வேண்டுமென்றும், அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் வருடத்தில் 21 நாட்கள் லீவுமுறை இக்கல்லூரிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதென்றும், 1960-ம் ஆண்டுக்கு முன்னர் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் இயங்கியது போல தனியார் பாடசாலைகளும் தொடர்ந்தும் இயங்கிவர அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## விலைகூடிய முத்திரைகள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில், பெறுமதிமிக்க 1000,500,100 ரூபா முத்திரைகளுக்கு கடந்த ஒரு மாதகாலமாகத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதஞல், வழக்கறிஞர்களும், நொத்தாரிசுமார்களும் பெரிதும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். (கெ)

## நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"வீட்டுக்கு வீடு வாசல்படி நானும் அதேகாரணத்துடன் அமைதியைத் தேடித்தான் வந்தேன்" என்றதும் இருவரும் சில நிமிஷங்கள் சிரிப்பில் திளைத்தோம்.

நண்பர் சொன்ஞர் "தாய் மகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடம் கணவனுடன் எப்படி எதற்காகச் சண்டை போடுவது என்பதுதான்" என்ருர் சிரித்துக் கொண்டே.

"ஓசை வெளிவராதமுறையில் வீட்டில் ஒரு அறையைக் கட்ட வேண்டும். மனைவி சண்டைக்கு ஆயத்தமானதும் பிள்ளைகளுக்குக் கேட்காமல் அந்தத் தனி அறைக்குள் இருவரும் சென்றுவிடவேண்டும்" என்று தமது யோசனையைத் தெரிவித்த நண்பர் "அதன்பின் சண்டை வருமா?" என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டுப்புறப்பட்டார்.

--ஊர்சுற்றி

நாகம்ஸ் (சுன்ஞகம்)
தினசரி: 4-45, 7-00 & 9-45
சனி, ஞாயிறு 2-45
ODESSA FILE

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ராதா
நம்பியார்
கவிதா
(புதிய பிரதி)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மர்லினி
பொன்சேகா
[illegible]

## லயன்ஸ் ஆதரவில்

# இலவச கண்வைத்தியம்: கண்ணுடிகளும் வழங்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கில் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் ஏழைகட்கான இலவச கண்வைத்திய பரிசோதனை இரு டாக்டர்களால் மேற்கொள்ளப்பட்டது.

இப்பரிசோதனைகளில் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

கண்பார்வை குறைந்தவர்கட்கு இலவச கண்ணுடிகளை வழங்கவும் லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளைக் கைதடி நவில்ட் பாடசாலை அதிபர் திரு. எஸ். டேவிட், கைதடி கலைவாணி வித்தியாசாலை அதிபர் திரு. நா. கந்தையா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய பலன்

தை மாதம் 19-ம் திகதி

சனிக்கிழமை

(2-2-1980)

மேடம்; இன்று முன்னணியில் நிற்பீர்கள், செல்வாக்கு வளர்பிறையாகும், காதலர் எண்ணங்கள் கைகூடும், சம தினம்.

இடபம்: அறவழியில் நாட்டம் பிறக்கும், இல்லத்திலும் இனிமையுண்டு, சிலருக்கு பிரிவுத்துயர் வாட்டும், தொழிலிலும் பெருமை சேரும்.

மிதுனம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், புதுமனை கட்டுவதற்கும் எண்ணம் பிறக்கும், பிறபொருள் வரவுமுண்டு.

கடகம்: தொழிலிலும் தொல்லையுண்டு, கூட்டு வியாபாரத்தில் பிரச்னை உருவாகலாம், வீண் பழிக்குமாளாகுவீர்கள்.

சிங்கம்: முகமன் பேசுவோரை நம்பவேண்டாம், குடும்பத்திலும் பூசல்கள் உருவாகும், திடசித்தம் நன்று.

கன்னி; கல்வி பயில்வோருக்கு கணிசமான நாள், சிலர் வாகனமொன்றை கொள்வனவு செய்யவும் இடமேற்படலாம், குறிக்கோள் வெற்றியுமுண்டு.

துலாம்: வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம், வேண்டாத உறவுகளைத் கண்டித்தல் நன்று, பின்னணியில் பிளவுக்குமிடமுண்டு.

விருச்சிகம்: மாதுருவழிச் சுபமுமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் பிறக்கும், தொழிலிலும் பிரியமேற்படும், வாழ்க்கையிலும் குதூகலம் உண்டு.

தனுசு: வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படும், புத்திரர் பெருமையுமுண்டு, தனச் சிறப்புமுண்டாம், தனிவழி நாட்டமுமுண்டாம்.

மகரம்: அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும், குறைகேட்க நேரிடலாம், அபாய காரியங்களில் பங்கு பற்ற வேண்டாம்.

கும்பம்: காதலர்களுக்கு நன்மாற்றங்கள் ஏற்படலாம், சிநேகிதர்வழிக் கொண்டாட்டத்திற்கிடமுண்டு, நீண்ட பிரயாணமும் ஏற்படலாம், திருமணப் பேச்சுமுண்டு.

மீனம்: விவசாயிகள் பாதிக்கப்படுவர், மனையிலும் பிணக்குகள் தோன்றலாம், வைத்திய செலவுகளுமேற்படலாம், நிதானம் விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி

திருமலை

க.வேலுப்பிள்ளை

# திறந்தவெளி அரங்கு அமைக்க நடவடிக்கை

(நெடுந்தீவு)

வெளியிடங்களில் உள்ள நெடுந்தீவைச்சேர்ந்தவர்களின் உதவியுடன் நவீன வசதிகள் கொண்ட திறந்தவெளி அரங்கு ஒன்றை அமைப்பது குறித்து நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் அதன் தலைவர் திரு.நா.இராமச்சந்திரன் தலைமையில் கூடி யோசனை நடத்தியது.

நெடுந்தீவில் திறந்த வெளியரங்கு இல்லாமையால் கலை நிகழ்ச்சிகளை நடத்தவும் பகிரங்கக் கூட்டங்களை நடத்தவும் வசதியற்ற நிலையில் கலைஞர்களும் கழகங்களும் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் நெடுந்தீவுக்கென நிறுவப்பட இருந்த திறந்தவெளியரங்கு என்ன காரணத்திஞலோ நிறுவப்படவில்லையெனவும் தெரிவித்த தலைவர் நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்தின் இம்முயற்சிக்கு வெளியிடங்களில் உள்ள எமது இளைஞர்கள் பூரண ஆதரவு தருவார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அரங்கு நிறுவ வெளி உதவி கிடைக்கும் பட்சத்தில் நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டரங்கின் ஒரு பகுதியை அதற்கெனத் தந்துதவுமாறு கழகம் கல்வி அமைச்சரைக் கோருவதெனவும் அமைச்சு அதற்கு அனுமதி வழங்கிஞல் பொதுவான பாவனைக்கு உதவக் கூடியவகையில் அரங்கை மகாவித்தியாலயத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)

## பிணையில் செல்ல அனுமதி

(புலோலி)

வாணக்குடியிருப்பு தாலிக் கொடித் திருட்டு சம்பந்தமான சந்தேக நபர்கள் இருவரும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

திருமதி அன்னம்மாவின் கொடித் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிசாரிஞல் கைது செய்யப்பட்ட பசுபதி என்பவரும் அவரது மகன் துஷ்யந்தனும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதனையடுத்து இருவரையும் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதவான் மேல் விசாரணையை இம்மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

களவாடப்பட்ட 20,000 ரூபா பெறுமதியான தாலிக் கொடி பருத்தித்துறைப் பொலிசாரால் மீட்கப்பட்டது தெரிந்ததே. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை

ஈழநாடு 50 சதம் The EELANAADU

## ஜெர்மன் உதைபந்தாட்ட நிபுணர் யாழ். நகரில் பயிற்சி

(பாஷையூர்)

யர்ழ் மாவட்டத்தில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு மேற்கு ஜெர்மன் பயிற்சியாளர் திரு. பேர்க்காட் பாப்பே இன்றும் நாளையும் காலை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் பயிற்சியளிப்பார்.

யாழ் உதைபந்தாட்டச் செயலாளர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்பின் ஏற்பாட்டின் பேரில் இப்பயிற்சி முகாம் இடம்பெறுகிறது. (இ)

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச் வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கொள்ளைகளைக் கண்டுபிடிக்க பொலிசுக்கு உதவவேண்டும்

## வாடகைக்கார்ச் சாரதிகளிடம் உதவி பொலிஸ் அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''கடந்தகாலங்களில் ஒவ்வொரு வாடகைக் கார்ச் சாரதியும் வெவ்வெறுவிதமான கட்டணங்களை அறவிட்டுவந்ததனல் வெளிநாட்டவர், வாடகைக் கார்களை வாடகைக்கு அமர்த்தும் போது வெவ்வேறுவிடமான கட்டணங்களைச் செலுத்தி வந்தனர். அதனுல் வெளிநாட்டவர் உள்ளங்களில் எமது நாட்டைப் பற்றிக் கேவலமான எண்ணங்கள் தோன்றிவருகிறது. அந்தநிலை மாறி சிங்கப்பூரைப் போன்று யாழ்ப்பாணத்திலுள்ள சகல வாடகைச்சாரதிகளும் ஒரே விதமான கட்டணங்களை அறவிடவேண்டும்,

யாழ் வாடகைக்கார்சேவையாளர் கூட்டுறவுச் சிக்கன சங்கத்தின் 16வது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ, யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினுர்.

மேற்படி கூட்டம் நேற்று முன்தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் திரு. ரி. ஏ. தலைமையில் நடைபெற்றது. திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

இரண்டுவாரகாலம் சிங்கப்பூரில் இருந்தேன். அப்பொழுது அங்குள்ள வாடகைக்கார்களை உபயோகிக்கவேண்டிய நிலை ஏற்பட்டபோதெல்லாம் அங்குள்ள வாடகைக் கார்களை உபயோகித்தேன். எந்த வாடகைக் காரை வாடகைக்கு அமர்த்திலுைம் எல்லாக் கார்களும் ஒரேவிதமான கட்டணங்களையே அறவாக்குகின்றன. வெளிநாட்டவர்தானே அவரிடம் அதிக கட்ணத்தை அறவிடுவோம் என்ற எண்ணம் அங்கே கிடையாது. அதனுல் சிங்கப்பூருக்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் அந்த நாட்டைப் பற்றி மிக உயர்ந்த எண்ணங்களுடன் செல்லுகிறுர்கள். அந்த நிலையை இங்கும் ஏற்படுத்த யாழ்ப்பாணத்திலுள்ள வாடகைக் கார்ச் சாரதிகள் முயலவேண்டும்.

ஒருசிலவாரங்களில் எண்ணையின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம். அதனுல் வாடகைக் கார்ச் சாரதிகளும் அதிக கட்டணத்தையே அறவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளனர், அதனுலும் பொதுமக்களே பாதிக்கப்படுவர். வாழ்க்கைச்செலவு தினமும் விஷம்போல் ஏறிக்கொண்டிருப்பதால் பொதுமக்கள் சொல்லொணுத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அதனுல் கட்டணத்தைக் கூட்டும்போது பொதுமக்களின் நலனையும் கருத்தில்கொண்டு செயல்படவேண்டும்.

### மக்களுக்கு விட்டுக்கொடுக்க விருப்பமில்லை

யாழ்ப்பாணத்தில் வாகனப் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டே போவதால் வீதிகளை விஸ்தரிக்கவேண்டியுள்ளது. பலாலி வீதியை யாழ்ப்பாணத்திலிருந்து பலாலிவரை அகலமாக்கவும் அவ் வீதியில் உள்ள சந்திகளில் சுற்றுவட்டப்பாதை அமைப்பதற்கும் 78ம் ஆண்டு பணம் ஒதுக்கீடு செய்தேன். வீதியை அகலமாக்க விருப்பம்கொண்ட மக்கள் தமது காணிகளை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. அதனுல் அத்திட்டம் கைவிடப்பட்டது. எனினும் ஆரியகுளம் சந்திவரை வீதிகள் பெருப்பிக்கப்படும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜாவிசுவநாதன் பேசுகையில் கூறியதாவது:

எண்ணைவிலை மேலும் அதிகரித்துவருவதால் வாடகைக் கார்ச் சொந்தக்காரர்கள் ஒட்டோறிக்ஷோவை வாடகைக்கு விடுவது தொடர்பான ஆலோசனைகளை யாழ் மாநகர சபை வழங்க ஆயத்தமாக இருக்கிறது.

பஸ்நிலையத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இட நெருக்கடி ஏற்பட்டுவருவதால் வாடகைக்கார்த் தரிப்புநிலையம் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கப்படும். தரிப்பிடம் மாற்றப்படும்போது வாடகைக் கார்ச் சொந்தக்காரர் களின் ஆலோசனைபெறப் படும்.

வாடகைக் கார்ச் சாரதிகள் சிலர் தவறுதலான முறையில் நடப்பதால் வாடகைக்கார்ச் சாரதிகள் எல்லோருக்கும் களங்கம் ஏற்படுகின்றது.

உதவிப் பொலிஸ் அதிபர் ஜனுப் நிஸாம் பேசுகையில் கூறியதாவது:-

4-ம் குறுக்குத்தெருவிலுள்ள திருட்டுச் சம்பவம் ஒன்றில் வாடகைக் கார் ஒன்று சம்பந்தப்பட்டதாகக் கூறி 4 நாட்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டதாகவும் பொலிசாரினுல் வாடகைக் கார்ச் சாரதிகள் துன்புறுத்தப்படுவதாகவும் கூறப்பட்டது.

இத்திருட்டுக்கு உபயோசித்த காரைப் பொலிசார் மறித்துச் சோதனையிட்டபோது அக்காரில் இருந்து அவ்வீட்டில் திருடப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அக்காரைக் கைப்பற்றியதனுல்தான் பின்பு திருடர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் சட்டத்தரணி அலோசியசின் கொலையிலும் அத்திருடர்களே சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு வாடகைக் கார்ச் சாரதி செய்யும் தவறினுல் எல்லா வாடகைக் கார்ச் சாரதிகளையும் பொலிசார் சந்தேகிக்கிறுர்கள்.

வாடகைக் கார்கள் யாவும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்படவேண்டும். பதிவு செய்யப்பட்டதற்கான அத்தாட்சிப்பத்திரத்தைக் காரின் முன் கண்ணுடியில் ஒட்டி வைக்கவேண்டும். கார்கள் திருத்தவேலைக்குக் கராஜ்ஜில் விடும்போது காரின் இலக்கத்தையும், கராஜ் உரிமையாளரின் பெயரையும் விலாசத்தையும் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கவேண்டும். கார் தவறுதலான நோக்கத்திற்குப் பாவிப்பது தெரிந்தால் உடனடியாகப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும்.

களவு, கொள்ளைச் சம்பவங்களுக்குப் பாவிக்கப்படும். காரின் இலக்கங்களையும் இடங்களையும் பொலிசாருக்கு அறிவித்து உதவுபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். எக்காரணம் கொண்டும் அறிவிப்பவர்களின் பெயர்கள் வெளியிடப்பட மாட்டாது. சாவகச்சேரிப் பாடசாலைக் கொள்ளைகுப் பாவிக்கப்பட்ட காரைக் கண்டுபிடிக்க பொலிசாருக்கு உதவ முன்வரவேண்டும்.

மற்றும் பலரும் உரையாற்றினர். (கொ-இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சங்க தெரிவுக் கோஷ்டிக்குப் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் தெரிவுக் கோஷ்டிக்கும் மிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா உதைபந்தாட்டச் சங்கத்தலைவர் திரு. மணிலால் பெர்னுன்டோ போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (கொ)

## யாழ். நீதிமன்றக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பழைய மரபு

முன்னுள் நீதிபதி திரு. நவரத்தினம் உரையாற்றுகையில் பழைய மரபுகளும், பாரம்பரியங்களும் பேணப்படவேண்டுமென்ற காரணத்திற்காகப் புதிய நீதிமன்றக் கட்டிடங்கள் அமைக்கப்படுவதை சிலர் விரும்பவில்லையென்று தெரிவித்து ஆனுல் எந்தவகையிலும் உடனடியாக நீதிமன்றக் கட்டிடங்கள் புதிதாக அமைக்கப்படவேண்டுமென்று கருத்துவெளியிட்டதுடன் இப்பழைய நீதிமன்றக் கட்டிடங்களினுல் பொதுமக்களும், இங்கு பணியாற்றும்ஊழியர்களும் பெரும் கஷ்டத்துச்குள்ளாவதாகவும் தெரிவித்தார்,

பழைய நீதிமன்றக் கட்டிடங்களைத் திருத்துவதற்கு பணம் வீணுகச்செலவு செய்யப்படுகிறதென்றும், நீதியரசர்களை வசதியீனமற்ற முறையில் செயல்படவிடக்கூடாதென்றும் சட்டத்தரணி திரு. பொன்னையா இக்குழு முன்னிலையில்தெரிவித்தார்.

''தமிழ் மக்களுடைய வசதிகளைப் பொறுத்தமட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் மக்களின் வசதிக்காக இருக்கவேண்டும். இதை அரசியல் கண்கொண்டு நோக்கக்கூடாது தமிழ்மக்கள் தமிழிலே அறிவது மிகமுக்கியம்'' என்றும் திரு. பொன்னையா கூறினுர்.

### நல்லூர் பற்றி யோசனை

நல்லூரில் பெருமளவு வசதிகள் இருப்பதால் அங்கு புதிய நீதிமன்றக் கட்டிடங்களை நிறுவலாமென்று சட்டத்தரணி திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா இக்குழு முன்னிலையில் கருத்துத் தெரிவித்தார்,

குடும்ப நீதிமன்றத்தில் விசாரணையை நடத்தும் நீதிபதியும் சட்டத்தரணிகளும் அங்குள்ள கட்டிடவசதிகள் திருப்திகரமாக இல்லாததால் பெரும் இடநெருக்கடியை எதிர்நோக்குவதாகவும், தற்பொழுது உள்ள நீதிமன்றக் கட்டிடங்கள் நீதிமன்றத்திற்கு உகந்ததாகவில்லையென்றும் சட்டத்தரணி திரு. எம், கே. சுப்பிரமணியம் விளக்கினுர்.

சிங்கப்பூரிலுள்ள நீதிமன்றக் கட்டிடங்கள் குளிரூட்டப்பட்டனவாகக் காணப்படுவதாக அங்கிருந்து இங்கு விஜயம் செய்த ஒரு இளம் சட்டத்தரணி தம்மிடம் கூறியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரதி அமைச்சர் கருத்து

யாழ், சட்டத்தரணிகளின் நீதிமன்றக் கட்டிடப் பிரச்னை ஊழியர்கள் பிரச்னை, நீதியரசர்களின் வசதியீனங்கள் போன்றவற்றை சட்டத்தரணிகள்மூலம் கேட்டறிந்து கொண்ட இக்குழுவின் தலைவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் ராஜ்யசபை உறுப்பினராகப் பதவிவகித்துவரும் திரு, ஜி. லட்சுமணன் வட சென்னைத் தொகுதியில் இருந்து லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார். (இ)

## வெற்றிடங்கள்

# டொலர்

### அலுமினியத் தொழிற்சாலை

### மாவிட்டபுரம்

### தெல்லிப்பழை

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| SPINNERS | (ஸ்பின்னர்கள்) | 8 |
| POLISHERS | (பொலிசர்கள்) | 15 |
| PUNCHING MACHINE OPERATORS | | 2 |
| TRAINEES | (பயிலுனர்கள்) | 20 பேர் |
| | | 45 |

எழுத்து மூலமான விண்ணப்பங்கள் 7-2-80 க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். 7-2-80க்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தில் வயது, அனுபவம் பற்றிய குறிப்புகள் இருத்தல் அவசியம்.

4854

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. QE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org